*புதுச்சேரி அரசு*

*துணைநிலை ஆளுநர் செயலகம்*

**No. LGS/PRO/2024** **31 ஜனவரி, 2025**

# <u>பத்திரிகை செய்தி</u>

மத்திய அரசின் சிறு, குறு மற்றும் நடுத்தர தொழில் துறை, புதுச்சேரி தொழில் & வர்த்தகத்துறை, மாவட்ட தொழில் மையம் ஆகியவை இணைந்து நடத்தும் , பாரதப் பிரதமரின் விஸ்வகர்மா கைவினைப் பொருட்கள் கண்காட்சி தொடக்க விழா புதுச்சேரி, கடற்கரை சாலை, காந்தி திடலில் இன்று (31-01-2025) நடைபெற்றது. மாண்புமிகு துணைநிலை ஆளுநர் திரு K. கைலாஷ்நாதன் குத்துவிளக்கேற்றி கண்காட்சியைத் தொடங்கி வைத்தார்.

மாண்புமிகு முதலமைச்சர் திரு. ந. ரங்கசாமி, மாண்புமிகு சட்டப்பேரவைத் தலைவர் திரு செல்வம், மாண்புமிகு உள்துறை & தொழில்துறை அமைச்சர் திரு ஆ. நமச்சிவாயம், மாண்புமிகு பொதுப்பணித்துறை அமைச்சர் திரு க. லட்சுமி நாராயணன், தலைமைச் செயலர் டாக்டர் சரத் சௌகான், தொழில்துறைச் செயலர் திரு ஜவஹர், எம்.எஸ்.எம்.இ அமைச்சக விஷ்வகர்மா திட்ட இயக்குநர் டாக்டர் ரமேஷ்யாதவ் ஆகியோர் விழாவில் கலந்து கொண்டனர்.

துணைநிலை ஆளுநர் அரங்குகளைப் பார்வையிட்டார். கண்காட்சியில் புதுச்சேரி மாநிலத்தை சேர்ந்த கைவினைக் கலைஞர்கள் மற்றும் விஸ்வகர்மா தொழிலாளர்களின் கைவினைப் பொருள்கள் காட்சி மற்றும் விற்பனைக்கு வைக்கப்பட்டு இருந்தன. 160 அரங்குகள் அமைக்கப்பட்ட இருந்தன. மேலும், பாரதப் பிரதமரின் விஷ்வகர்மா திட்டத்தின்கீழ் கலைஞர்கள் பதிவு செய்து கொள்வதற்கான ஏற்பாடுகளும் செய்யப்பட்டு இருந்தது.